முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 648**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.07.2021, வியாழக்கிழமை

1. அறமென்ற சக்திகொண்ட ஞானியே
அன்னதான சேவையாற்றும் தவசியே
வரம்பெற்று உலக மக்களுக்கு
வள்ளலாய் அற்புதம் நிகழ்த்தவந்த யோகியே
2. யோகியே தர்மத்தின் உயர் ஞானியே
உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
வாகுடனே ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் பிலவ மிதுனதிங்கள்
3. திங்களிளே அரங்கனால் போற்றப்படும்
திருவருள் காட்டும் சுத்தசன்மார்க்க நெறி
ஓங்கார ஓசை நிரம்பிய ஞான சக்தியாக
உலகமெங்கும் பரவி இனிதே கலியின் மாற்றம்
4. மாற்றமதும் அரங்கன் சக்தி மூலம்
மாதவசி அரங்கன் தொண்டர் மூலம் நடந்தேறும்
ஆற்றல்பட அரங்கா முருகா எனும் அமைதி தரும் ஞான ஜெபதபத்தை
மாற்றம் கருதி உலகோர் செய்துவர மண்ணுலகம் ஞான யுகமாற்றம் காணும்
5. காணவே அரங்கனின் மெய்ஞான சக்தியான
ஆற்றல்மிக்க புண்ணியத்தை எவர் கைக்கொள்கின்றாரோ
கைக்கொள்ளும் அவர்களுக்கெல்லாம் இலகுவாய்
கந்தவேலன் யான் இறங்கி ஞானம் அருள்வேன்
6. அருளாக அரங்கன் தொடர்பாக
அனைத்துமாக உலகோர் சிறந்து
இருளைவென்று கலியின் துன்பங்கள் போக்கி
இனிதே இந்த உலகில் ஞானவான்களாக சிறப்பர்
7. சிறந்துமே உலக மாற்றம்
சிறப்பறிவு கொண்டு அரங்கன் கொள்கைவழி
பரந்தஉலகமெங்கும் இனிதே ஏற்றம் கண்டு
பாடிடுவேன் உலகமாற்றமாக அரங்கனால் நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–